சுருக்கம்

போக்குவரத்து – மாண்புமிகு அமைச்சர் (போக்குவரத்து) அவர்களால் 03.07.2018 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு – மதுரை மாநகரப் பேருந்துகளில் அடுத்து இறங்குமிடங்களை ஒலி அறிவிப்பு மூலம் அறிந்துகொள்ளும் புதிய வசதி அறிமுகம் – அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

போக்குவரத்து (இ) துறை

அரசு ஆணை (நிலை) எண் 230

நாள்: 27.07.2018
விளம்பி – ஆடி 11
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கப்பட்டது:

மாண்புமிகு அமைச்சர் (போக்குவரத்து) அவர்களால் 03.07.2018 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு.

***

ஆணை:-

03.07.2018 அன்று போக்குவரத்துத் துறையின் மானியக் கோரிக்கை எண்.48–ன் மீது சட்டமன்றப் பேரவையில் விவாதத்திற்குப் பின் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

**மதுரை மாநகரப் பேருந்துகளில் அடுத்து இறங்குமிடங்களை ஒலி அறிவிப்பு மூலம் அறிந்து கொள்ளும் புதிய வசதி அறிமுகம்.**

"தமிழ்நாடு அரசு பேருந்துகளின் பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் நலன்களை எந்நாளும் கருத்தில் கொண்டு, அதற்கேற்றவாறு பல்வேறு புதிய திட்டங்களையும், புதிய முயற்சிகளையும் அரசு அறிமுகம் செய்து வருகிறது. பேருந்து பயணம் என்பது பயணிகளுக்கு எளிதாகவும் உற்ற நண்பனாகவும் இருப்பது அவசியமாகிறது.

மாநகரப் பேருந்துகளில் பயணிப்போர் அடுத்து இறங்க வேண்டிய நிறுத்தத்தினை அறிந்து கொள்வதிலும், வாகனப் போக்குவரத்து நெரிசல்மிக்க நேரங்களில் (Peak Hour) பயணிகள் தங்களின் இறங்குமிடத்தினை தவறவிடும் சிரமமும் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை மாநகரப் பேருந்து நிறுத்தங்களின் பெயர்களை ஒலி அறிவிப்பு மூலம் அறிந்து கொள்ளும் ஒரு புதிய திட்டம் அறிமுகம் செய்யப்படும். இதன் மூலம் பயணிகள் எளிதில், அடுத்தடுத்து வரும் நிறுத்தங்களை முன்கூட்டியே அறிந்து கொண்டு, எளிதில் இறங்கிட ஏதுவாகும்".

...2

2. மேற்கண்ட அறிவிப்பு தொடர்பான ஒப்பந்த பணியினை, நடைமுறைபடுத்த வேண்டுமென விளம்பர விதிமுறைக்குட்பட்டு மதுரை, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக மேலாண் இயக்குநருக்கு அரசு இதன்வழி ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பி. டபிள்யு. சி. டேவிதார்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
மேலாண் இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், மதுரை,
அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்கள். (மதுரை நீங்கலாக)

நகல்
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
போக்குவரத்துத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
அரசு துணைச் செயலாளர் அவர்களின் நேர்முக உதவியாளர் போக்குவரத்துத் துறை ,
சென்னை–9.
தனி அலுவலர், தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
இயக்குநர், சாலைப் போக்குவரத்து நிறுவனம், சென்னை–113.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/7/2018

பிரிவு அலுவலர்